# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## புவியியல்துறை,கலைகலாசாரபீடம்

## முதலாம் வருடம் முதலாம் அரையாண்டுகலைமாணித் தேர்வு

## 2011/2012 (Dec/Jan. 2014)

26 MAR 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

| GY 1112:புவியியலின் அடிப்படைகள் (Fundamentals of Geography) | நேரம் 02மணித்தியாலங்கள் |
|---|---|

- பகுதி I லிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II லிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **மூன்று(03)**வினாக்களுக்கு விடைதருக.
- படங்கள்,எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

### பகுதிI

1)

a. புவியியல் என்பதனை வரையறைசெய்து,அதன் உள்ளடக்கத்தை வகைப்படுத்துக.

(05புள்ளிகள்)

b. ஞாயிற்றுத் தொகுதிஎன்பதுயாது? அதில் புவிக்கோளின் தனித்துவம் பற்றிக் குறிப்பிடுக.

(10புள்ளிகள்)

c. புவித் தகடுஎன்றால் என்ன? அதன்உருவாக்கம் மற்றும் விருத்திக்குக் காரணமானபுவியின் உட்பாகச் செயன்முறையினைவிளக்குக.

(15புள்ளிகள்)

2)

a. காலநிலை மூலக்கூறுகள் எவையெனக் குறிப்பிட்டு அவற்றை அளவீடு செய்யப்பயன்படுத்தும் பல்வேறு கருவிகளை எடுத்துக் காட்டுக.

(08புள்ளிகள்)

b. குடிப்பரம்பல், விவசாய நடவடிக்கை, உயிர்ப்பல்வகைமை, மனித சௌகரியம் முதலானவற்றில் காலநிலை கொண்டிருக்கும் செல்வாக்கு தொடர்பாக பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(14புள்ளிகள்)

c. காலநிலை சார்ந்த அனர்த்தங்கள் மனித வாழ்வுக்கு எவ்வகையில் அச்சுறுத்தலாக அமைகின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

(08புள்ளிகள்)

3)

a. மானிடப்புவியியலின் உபபிரிவுகள் யாவை?

(05புள்ளிகள்)

b. சூழல் ஆதிக்கவாதம், மானிட ஆதிக்கவாதம் எனும் கருத்துக்களை வேறுபடுத்துக.

(10புள்ளிகள்)

c. சூழல் ஆதிக்கவாதம் இன்றுவரை நிலைத்திருப்பதற்குப் பொறுப்பாயமைந்த காரணிகளை உதாரணங்களுடன் ஆராய்க.

(15புள்ளிகள்)

## பகுதிII

4) புவியியற் கற்கையின் நவீனபோக்கும் நடைமுறைவாழ்வில் அதன் முக்கியத்துவமும் பற்றிக் கருத்துரைக்குக.

(40புள்ளிகள்)

5) குடித்தொகைப்பரம்பலைத் தீர்மானிக்கும் பௌதீக, பண்பாட்டுக்காரணிகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிலுமிருந்து இவ்விரண்டு காரணிகளைத் தெரிவுசெய்து குடித்தொகைப்பரம்பலைத் தீர்மானிப்பதில் அவை கொண்டுள்ள முக்கியத்துவத்தினை உலகநாடுகளை உதாரணங்காட்டி விளக்குக.

(40புள்ளிகள்)